## பிரிவு – 6

## நிதி ஆதார ஒதுக்கீட்டு முறை

**5.6.1.** பகிர்ந்தளிக்கப்பட்ட வரிகள் மற்றும் மானியங்களை மாநில அரசு, உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்வது உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் ஒரு முக்கிய அம்சமாகும். மேலும், உள்ளாட்சி மன்றங்களின் மொத்த வருவாய்களில் ஒரு முக்கிய கூறாகவும், இந்த ஒதுக்கீடு அமைகிறது. ஊராட்சிகள் தங்களது செலவுத் தேவைகளில் 43 சதவீத அளவுக்கு, அரசின் மானியங்களையே நம்பியிருக்கின்றன என்று புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், 85 சதவீத தேவைக்கு அவை அரசின் மானியத்தை நம்பியுள்ளன. நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களைப் பற்றி ஆராயும்போது, பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் முறையே 38 சதவீதம், 33 சதவீதம், 50 சதவீதம் அளவுக்கு அரசின் மானியங்களை நம்பியிருப்பது தெரிகிறது. பொதுவாக, வரிகளைப் பகிர்ந்தளிக்கும்போது, உள்ளாட்சி மன்றங்களின் தேவைகள் கருத்தில் கொள்ளப்படுவது இல்லை; உள்ளாட்சி அமைப்புகளில் வலுவான நிதி ஆதாரம் அமைவதற்கு ஏதுவான வகையில் அல்லாமல் மானியங்கள் நெறிமுறையற்ற தன்மையில் அளிக்கப்படுவதாகத் தெரிகிறது.

**5.6.2.** அரசு நிதியிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிகளை மாற்றுவதன் நோக்கம், சமுதாயத்திற்கு மன நிறைவளிக்கும் அளவுக்கு வசதிகளை செய்து கொடுப்பதேயாகும். ஆயினும், இந்நோக்கத்தை உள்ளாட்சி மன்றங்களால் எய்த இயலவில்லை என்பதையே சான்றுகள் நமக்கு உணர்த்துகின்றன. மேலும், தற்போதைய நிதி மாற்ற முறை, உள்ளாட்சி மன்றங்களின் ஊக்கத்தைப் பாதித்துள்ளதாகக் கூறப்படுகிறது. நிதி ஆதாரங்களை அரசு தாமாகவே மாற்றம் செய்ய வழிவகை முறையாக இல்லாததால், உள்ளாட்சி மன்றங்கள் மாநில அரசையே எதிர்பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. மாநில அரசு நிதிகளை உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படை செய்யும், செயல் ஒத்திசைவான முறை (Coherent System) எதுவும் இல்லை என்று பல அண்மைக்கால ஆய்வுகளிலிருந்து தெரிய வருகிறது. இதனால் பொறுப்பேற்பதில் குழப்பமும், பதில் சொல்லும் பொறுப்பில்லாமையும் காணப்படுகிறது. தற்போதுள்ள நிதி மாற்ற முறை, பாதிக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் நிதிப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவவில்லை என்பதுடன், உள்ளாட்சி மன்றங்களின் படிப்படியாக வளர்ந்துவரும் தேவைகளுக்கேற்பவும் இல்லை என்று கூறவேண்டி இருக்கிறது.

**5.6.3.** இது தொடர்பாக, வரிகளிலிருந்து பகிர்வு செய்தல் மற்றும் மானியம் வழங்கல் என்பதன் மூலம் நிதிமாற்றல் ஏற்பாடு, திறமை, சமத்துவம் என்ற இரண்டு நோக்கங்களை நெறிப்படுத்தும், பொதுவான கோட்பாடாக இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.. மேலும் அவற்றைப் பகிர்ந்தளிப்பதற்கான பகிர்வு முறை மாநில வரிகளாக இருந்தாலும் சரி அல்லது மானியங்களாக இருந்தாலும் சரி, முற்றிலும் வெளிப்படையாகவும் மற்றும் முன்கூட்டியே அறியக்கூடிய ஏற்பாடாகவும் இருக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின் கீழ் வருவாய் பங்கீடு, மானியங்கள், உரிமைத் தொகைகள் குறித்த விதிகள் அனைத்து நிலை அரசுகளும் தெரிந்திருக்க வேண்டும.

**5.6.4.** உள்ளாட்சி மன்றங்களின் தேவை அளவிலான தற்போதைய நிதிப் பற்றாக்குறை, கூடுதலாக வரி ஒப்படைகள் செய்ய வேண்டிய அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக நிதி ஆதாரங்கள் கிடைக்கச் செய்வதற்காக நிதி மாற்றல் ஏற்பாட்டை மாற்றியமைக்க வேண்டிய அளவுக்கு, மிக அதிகமாக உள்ளது. புதிய நிதிமாற்றல் ஏற்பாட்டின் நோக்கம், பின்வருவனவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

(i) உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமைகளில், மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஒரே அடுக்கைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கிடையிலுமான பகிர்விலும் காணப்படும் பற்றாக்குறையைப் போக்குதல்

(ii) உள்ளாட்சி மன்றங்களின் தற்போதைய நிலைகளில் பணிகளை சற்று உயர்த்த நிதி ஒதுக்குதல்

(iii) உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்ற வேண்டிய சில கூடுதல் பணிகளுக்கு நிதியொதுக்குதல்

**5.6.5.** அரசியலமைப்புச் சட்டத்தின் 73 வது மற்றும் 74 வது திருத்தங்களைச் சேர்ந்த 11 வது 12 வது விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அலுவல்கள் மற்றும் பொறுப்புகளை மாற்றும்போது, அதனோடு சேர்த்து அதற்கு இணையான அளவுக்கு இருந்த நிதி மாற்றமும் செய்யப்பட வேண்டும். வரி வீதங்கள், பயனீட்டாளர் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்களை வரையறுக்கும் பிரச்சினைகளில், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பதன் மூலம், தற்போதுள்ள நிதி அதிகாரங்களில் ஒரு சமன்பாட்டை ஏற்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே, இதன் உள்ளார்ந்த பொருளாகும். உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் பகுதிகளில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மன நிறைவளிக்கும் வகையில் செய்து கொடுக்கும் வகையில் கோட்பாடுகளை வரையறுப்பது அவசியம் என்று மாநில நிதி ஆணையம் கருதுகிறது. இதனை, மாநில அரசு உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்ற வேண்டிய நிதிகளைத் தீர்மானிப்பதன் தொடக்கமாகக் கொள்ள வேண்டும். உள்ளாட்சி மன்றங்களுக்குத் திட்டங்களை மாற்றுவதில் வரிப் பகிர்வே முதன்மையிடம் வகிக்க வேண்டும். மானியங்கள், எவ்வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும், இ ரண்டாம் இடத்தை வகிக்க வேண்டும். மேலும், இம்மானியங்கள் உள்ளாட்சி மன்றங்களின் நிதிகளில் காணும் ஏற்றத்தாழ்வுகளைச் சமன்படுத்தும் வகையில் சீரமைக்கப்பட வேண்டும்.

**5.6.6.** மாநில நிதி ஆணையத்தின் ஆய்வு வரம்பின்படி, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையில் நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதை நெறிப்படுத்தக் கூடிய கோட்பாடுகளைப் பரிந்துரைப்பது அவசியமாகும். அவ்வாறு பகிர்ந்தளிக்கும் போது பின்வரும் கூறுகளை மனதில் கொள்ளவேண்டும்.

(i) வருவாய்க் கணக்கில் மட்டுமே, அதாவது, பராமரிப்புக்கு மட்டுமே நிதி ஆதாரங்கள் மாற்றப்படும்.

(ii) உள்ளாட்சி மன்றங்கள் முக்கியக் குடிமைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு மட்டும் இந்த நிதி ஆதாரங்களை பயன்படுத்த வேண்டும்.

(iii) உள்ளாட்சி மன்றங்களின் 31.3.94 வரையிலான நிதி நிலை மதிப்பிடப்பட்டு 1997 ஏப்ரலில் தொடங்கும் 5 ஆண்டு காலத்திற்குப் பயன்படுத்தத் தேவையான நிதி ஒதுக்கீடு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

**மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஒரே அடுக்கைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கிடையேயும் நிதிப் பகிர்வு முறை (Vertical and Horizontal Distribution)**

**5.6.7.** மேற்சொன்ன ஆய்வு வரம்புகளின் கீழ் வருகின்ற பல்வேறு கூறுகளைக் கருத்திற் கொண்டு, மாநில நிதி ஆணையம் மாநில நிகர வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி மாறறம செய்வது குறித்துப் பரிசீலித்து முறையான நிதி மாற்ற ஏற்பாடு ஒன்றைப் பரிந்துரைத்துள்ளது.

**5.6.8.** மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்யும் முறை இரண்டு மேலிருந்து கீழ் பங்கீட்டு முறையும் மூன்றாவதாக ஒரு அடுக்கு முறை பங்கீடும் கொண்டதாகும். இவை குறித்து பின்வருமாறு பரிந்துரை செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| நிலை I<br>(மேலிருந்து கீழ் முறை) | மாநில அரசிடமிருந்து<br>(i) ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கும்<br>(ii) நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கும் மாற்றுவதற்காக மாநில அரசால் வரையறுக்கப்படும் நிதி ஒதுக்கீடு |
| நிலை II<br>(மேலிருந்து கீழ் முறை) | நிலை Iல் ஊரக/நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்குக்கென ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகளை, ஊரக உள்ளாட்சி அமைப்பின் கீழ் வருகின்ற மாவட்டப் பஞ்சாயத்துகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சி களுக்கும், நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்பின் கீழ் வருகின்ற பேரூராட்சிகள் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு அடுக்கு வாரியாக பகிர்ந்தளித்தல். |
| நிலை III<br>(அடுக்கு முறை) | நிலை IIல் அந்தந்த அடுக்குகளுக்கான நிதி ஒதுக்கீட்டை ஒரே அடுக்கைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களிடையே அதாவது ஊராட்சிகள் /ஊராட்சி ஒன்றியங்கள்/ மாவட்டபஞ்சாயத்துகள் ஆகியவற்றுக் கிடையேயும் மற்றும் பேரூராட்சிகள்/ நகராட்சிகள்/மாநகராட்சிகள் ஆகியவற்றுக்கு இடையேயும் பகிர்ந்து அளித்தல். |

**5.6.9.** மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு, பொருத்தமான நிலைகளுக்குச் செய்யப்பட வேண்டிய நிதி மாற்றங்களை முடிவு செய்ய பின்வரும் கோட்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்:

(i) எளிமையானவையாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.
(ii) இருக்கின்ற அதிகார பூர்வமான தகவல்களின் அடிப்படையிலானவையாக இருக்க வேண்டும்.
(iii) நியாயமானவையாகவும் நடுநிலைமையானவையாகவும் இருத்தல் வேண்டும்.

**5.6.10.** ஊரக, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிகளை மாற்றுவாதற்கான கோட்பாடுகளை வகுக்கும்போது, மாநில நிதி ஆணையம், ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிருவாகம் – குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சம்பந்தப்பட்ட செயலர்கள் மற்றும் துறைத் தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டு அறிந்தது.

**5.6.11.** மாநில அரசிடமிருந்து ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிகளை மாற்றுவதற்கு வகுக்கப்பட்ட கோட்பாடுகள் வருமாறு:

**நிலை I : மாநில அரசிடமிருந்து ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றுதல். (மேலிருந்து கீழ்முறை)**

**5.6.12.** நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளின் அளவு மற்றும் நடுநிலை கண்ணோட்டத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிகளை ஒதுக்க, மக்கள் தொகை அடிப்படையிலான கணக்கு முறை, பொதுவாக, நல்ல அடிப்படை என ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே, மாநில அரசிடமிருந்து ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிகள் மாற்றப்படுவது கடைசியாக எடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இருக்கும். எனவே, ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கிடையேயான பகிர்வு விகிதாச்சாரம் 60:40 என்ற அடிப்படையில் இருக்கும்.

**நிலை II: ஊரகப் பகுதி (மாநில அரசிடமிருந்து ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்வு) (மேலிருந்து கீழ்முறை)**

**5.6.13.** ஊரகப் பொதுத் தொகுப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வெவ்வேறு அடுக்குகளுக்கு, அதாவது

1. மாவட்ட பஞ்சாயத்துக்கள்
2. ஊராட்சி ஒன்றியங்கள்
3. ஊராட்சிகள் ஆகியவற்றுக்கான பகிர்வு ஏற்பாடு பின்வருமாறு இருக்கும்.

**i. மாவட்ட பஞ்சாயத்துகள்**

மாவட்ட பஞ்சாயத்து என்பது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அமைப்பு முறையாகும். அதன் அமைப்பும் அலுவல்களும் இன்னும் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. எனவே, ஊரக பொது தொகுப்புக்குரிய மொத்த நிதி ஒதுக்கத்திலிருந்து, அதன் தேவைகளை நிறைவு செய்யும் அளவிற்கு மட்டும் தற்போது ஒட்டு மொத்த மானியம் வழங்கப் பரிந்துரைக்கப்படுகிறது. அது தற்காலிகமாக ஊரக மொத்த பொதுத் தொகுப்பில் 14 விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**ii. ஊராட்சி ஒன்றியங்கள் / ஊராட்சிகள்**

சம்பந்தப்பட்ட அமைப்புகளின் எண்ணிக்கை அவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ளப் பணிகள், குடிமைப் பணிகளின் தன்மை மற்றும் அளவு, அப்பணிகளை நிறைவேற்ற அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை

ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கிடையேயான விகிதாச்சாரம், மாவட்ட பஞ்சாயத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையை நீக்கி மீதமுள்ள தொகையில், 50:50 என்ற அடிப்படையில் இருக்கலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

**நிலை III (அ) ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையேயான பகிர்வு:**

| | | |
|---|---|---|
| (1) | ஊராட்சி ஒன்றியங்களின் மொத்த மக்கள் தொகை அடிப்படை (கடைசி மக்கள்தொகை கணக்கெடுப்பு) | 50 விழுக்காடு |
| (2) | பட்டியல் சாதியினரின், பட்டியல் பழங்குடியினரின் மக்கள்தொகை அடிப்படை | 25 விழுக்காடு |
| (3) | ஊராட்சி ஒன்றியங்களின் நிதி வலிமை – அடிப்படை ( சராசரி தனி நபர் நில வரி வருவாய் – அடிப்படையில்) | 25 விழுக்காடு |
| | மொத்தம் | 100 விழுக்காடு |

**5.6.14.** ஊராட்சி ஒன்றியங்களுக்கு பயன் அளிக்கக்கூடிய முதன்மைக் கூறு, மக்கள் தொகை என்பதால் நிதிப் பகிர்வு முறையில் மக்கள் தொகை சார்ந்த கூறுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்படும் அளவு 50 சதவீதமாகும். எஞ்சிய 50 சதவீதம், மற்றைய ஆதாரத்திற்கு ஒதுக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் சராசரி தனி நபர் நில வரி வருவாயை அடிப்படையாகக் கொண்டு நிதி வகையில் தனித்தியங்கும் தன்மைக்கு 25 சதவீதமும், பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினரின் மக்கள்தொகை அடிப்படைக்கு 25 சதவீதமும், ஒதுக்கப்படுகிறது. இது தலைகீழ் விகிதாச்சார அடிப்படையிலான ஒதுக்கீடாகும். அதாவது, தனி நபர் நிலவரி வருவாய் அதிகமுள்ள (நிதி வலிமைக் கூறு) ஊராட்சி ஒன்றியங்களுக்குக் குறைவான நிதியும், தனி நபர் நில வரி வருவாய் குறைவாகவுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக நிதியும் ஒதுக்கப்படும். ஒன்றியங்களுக்கு கிடைக்கக்கூடிய நிதியுதவி எடுத்துக்காட்டுகள் இணைப்பு எண் 124ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**5.6.15.** ஊராட்சி ஒன்றியங்களின் சராசரி தனி நபர் நில வரி வருவாய் அடிப்படையில், அவைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த அளவு கோல் உள்ளாட்சி மன்றங்களின் நிதி வலிமையைக் குறிப்பிடும் குறியீடாக அமைகிறது. உயர் நிலையைச் சேர்நத ஊராட்சி ஒன்றியங்களுக்கு குறைந்த அளவிலும், மிக உயரிய நிலையைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு மிகக் குறைவாகவும் நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படலாம். கீழ்நிலையைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்படலாம். இதனால், இந்த வகையின் கீழ் வருகின்ற உள்ளாட்சி மன்றங்கள் இந்த நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு தங்களின் வருவாய்ப் பற்றாக் குறையை ஈடு செய்து கொள்ளலாம்.

**5.6.16.** ஊராட்சிகளுக்காக செய்யப்படும் ஒதுக்கீடுகள், அவற்றுக்கிடையே பின்வருமாறு பகிர்ந்து கொள்ளப்படும்:–

நிலை III (ஆ) ஊராட்சிகளிடையே நிதிப் பங்கீடு:

| | | |
|---|---|---|
| (1) | கடைசியாக எடுக்கப்பட்ட (1991ல்) மக்கள் தொகை கணக்கின் அடிப்படை | 50 விழுக்காடு |
| (2) | பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடியினரின் மக்கள் தொகை (கடைசியாக 1991ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) | 15 விழுக்காடு |
| | துணை மொத்தம் | **65 விழுக்காடு** |
| (3) | தனி நபர் வீட்டு வரி வசூல் அடிப்படை | 15 விழுக்காடு |
| (4) | முக்கிய குடிமைப் பணிகள் தொடர்பான அடிப்படை வசதி பராமரிப்புப் பணியில் பற்றாக்குறை (ஊராட்சிப் பகுதியிலுள்ள சொத்துக்களையொட்டி) | 20விழுக்காடு |
| | மொத்தம் | **100 விழுக்காடு** |

பின்குறிப்பு: ஒரு சில ஊராட்சிகளுக்கு கணக்குமுறை வகுக்கப்பட்டு அதன் எடுத்துக்காட்டுகள் இணைப்பு எண் 123–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**5.6.17.** நகர்ப்பகுதி ஒதுக்கீடுகளின் பங்கீட்டு கோட்பாடுகள் வருமாறு:–

நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் (மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு)

| | |
|---|---|
| நிலை I : (மேலிருந்து கீழ்) | ஊரக, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின், மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் அதாவது, 60:40 என்ற அடிப்படையில் மாநில அரசிடமிருந்து ஊரக/நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிப் பகிர்ந்தளிக்கப்படும் (ஊரகப்பகுதி என்பதன் கீழ் ஏற்கனவே குறிப்பிடப்படடுள்ளது) |
| நிலை II : (மேலிருந்து கீழ்) | நகர்ப்பகுதி தொகுப்பிலிருந்து<br>1. பேரூராட்சிகள்<br>2. நகராட்சிகள் மற்றும்<br>3. மாநகராட்சிகள்<br>ஆகிய வெவ்வேறு அடுக்குகளுக்கு நிதிகள் பகிர்வு |

**5.6.18.** 1991 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, அந்தந்த அடுக்குகளைச் சேர்ந்த உள்ளாட்சி அமைப்புகளிடையே அதாவது பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கிடையே காணப்படும் மக்கள்தொகையின் விகிதாசார அடிப்படையில் மேற்சொன்ன பகிர்வு செய்யப்படுகிறது.

நடப்பு விகிதாசாரம் பின்வருமாறு இருக்கும்.

| | | சதவீதம் |
|---|---|---|
| (i) | பேரூராட்சிகள் | 38 |
| (ii) | நகராட்சிகள் | 31 |
| (iii) | மாநகராட்சிகள் | 31 |

நிலை III

(அடுக்குமுறை) ஒரே அடுக்கைச் சேர்நத உள்ளாட்சி அமைப்புகளிடையே அதாவது , பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் நிதிப் பகிர்வு செய்யப்படும்.

5.6.19. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் அந்தந்த அடுக்குக்குரிய தொகையை பிரித்துக் கொடுக்கத் தக்க தொகுப்பிலிருந்து தொகையைப் பகிர்ந்தளிப்பதற்கு, பின்வரும் மதிப்பு கோட்பாடு பின்பற்றப்படும்.

| | | பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் விழுக்காடுகள் | | |
|---|---|---|---|---|
| 1. | மொத்த மக்கள் தொகை (கடைசிக் கணக்கெடுப்பின்படி அதாவது 1991 ஆம் ஆண்டு) அடிப்படை | 45 | 45 | 40 |
| 2. | பட்டியல் சாதியினரின் / பட்டியல் பழங்குடியினரின் மொத்த மக்கள் தொகை அடிப்படை | 20 | 10 | 10 |
| | துணை மொத்தம் | 65 | 55 | 50 |
| 3. | நிதி நிலைக் குறியீடு சொந்த நிதி ஆதாரங்களிலின் தனி நபர் வருவாய் (31.3.94ஆம் நாளன்றுடன் முடிவடைந்த கடைசி மூன்றாண்டு களுக்கான வரி மற்றும் வரியல்லாத வருவாய் ஆதாரங்களின் சராசரி) | 15 | 15 | 15 |
| 4. | பணிக் குறியீடு (முக்கிய குடிமைப் பணிகள் குறித்த தற்போதைய ) தனி நபர் செலவு | 20 | 30 | 35 |
| | மொத்தம் | 100 | 100 | 100 |

5.6.20. பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கான பங்கீட்டு கணக்கு முறை வகுக்கப்பட்டு, சில எடுத்துக்காட்டுகள் இணைப்புகள் 121, 122–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**5.6.21.. அறிக்கையின் முக்கியப் பகுதி**

**தொகுப்பு அ:** இத்தொகுப்பில் உள்ளாட்சி மன்றங்களுக்கென ஒதுக்கப்பட்டு, ஆனால் அரசால் வசூலிக்கப்படுகின்ற வரிகள் அடங்கும். எனினும், இது கேளிக்கை வரி தவிர ஏனைய மாநில வரிகளில் முன்மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை. இந்நிதி உள்ளாட்சி மன்றங்களுக்கிடையே பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும்.

| | | 1997–98 ஆம் ஆண்டிற்கான முன் மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| அ) | முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி | 230.00 |
| ஆ) | உள்ளூர் செஸ்வரி, உள்ளூர் செஸ்மேல் வரி | 30.00 |
| இ) | கேளிக்கை வரி | 120.00 |
| | மொத்தம் | 380.00 |

**தொகுப்பு ஆ:** இது, கேளிக்கை வரி நீங்கலாக ஏனைய மாநில வரிகள் அடங்கிய பொதுப் பங்கீட்டு நிதித் தொகுப்பாகும். (DivisiblePool)

| | | 1997–98 ஆம் ஆண்டுக்கான முன்மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| அ) | விற்பனை வரி | |
| ஆ) | மோட்டார் வாகன வரி | 620.00 |
| இ) | மாநில ஆயத்தீர்வை | (இது பொதுப் பங்கீட்டு நிதித் தொகுப்பில் 8 சதவிகித அளவிற்கானதாகும்). |
| ஈ) | ஏனையவை அனைத்தும் | |

பொதுப்பங்கீட்டு நிதித் தொகுப்பு::– 1997–98 ஆம் ஆண்டுக்கான மாநில மொத்த வரி வருவாய் முன்மதிப்பீடு (projected) ரூ7,867 கோடியில் கேளிக்கை வரி ரு. 120 கோடி நீங்கலாக எஞ்சியது ரூ.7747 கோடி.

படிப்படியாக அதிகரிக்கும் வீதத்திலான நிதிப்பகிர்வு: தொகுப்பு **ஆ:**

| | | | |
|---|---|---|---|
| 1997–1998 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 8 விழுக்காடு |
| 1998–1999 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 9 விழுக்காடு |
| 1999–2000 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 10 விழுக்காடு |
| 2000–2001 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 11 விழுக்காடு |
| 2001–2002 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 12 விழுக்காடு |

நிதிப் பகிர்வு கொள்கை: (ஆ தொகுப்பிலிருந்து மட்டும்)

| | |
|---|---|
| மொத்தம் | 100 விழுக்காடு |
| மாநில சேமநிதி (சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதிக்காக 15%) | 15 விழுக்காடு |
| மீதப் பொதுப்பங்கீட்டு நிதித் தொகுப்பு | 85 விழுக்காடு |

| | 85 விழுக்காடடில் | 100 விழுக்காட்டில் |
|---|---|---|
| ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்கள் | 51 | 60 |
| மாவட்டப் பஞ்சாயத்து | 7 | 14 |
| ஊராட்சி ஒன்றியம் | 22 | 43 |
| ஊராட்சி | 22 | 43 |
| நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் | 34 | 40 |
| மாநகராட்சி | 10.5 | 31 |
| நகராட்சிகள் | 10.5 | 31 |
| பேரூராட்சிகள் | 13 | 38 |

குறிப்பு: 100 விழுக்காட்டில் ஊரக மற்றும் நகாப்பகுதி 60% 40 % என்பது மட்டும் குறிக்கப்பட்டுள்ளது. அந்த தொகுப்புகள் பகிர்வையும் ஒவ்வொரு தொகுப்பையும் 100 விழுக்காடு என்று எடுத்த கணக்கில் புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டுள்ளது.

நிதி வழங்கும் முறை:

நிதியை கீழ்க்கண்டவாறு மூன்று தவணைகளில் மாநில அரசு வழங்கும்.

| | | |
|---|---|---|
| முதல் தவணை–ஏப்ரல்–மே மாதம் | – | 25 விழுக்காடு |
| இரண்டாவது தவணை–ஆகஸ்ட்–செப்டம்பர் மாதம் | – | 50 விழுக்காடு |
| மூன்றாவது தவணை–ஜனவரி–பிப்ரவரி மாதம் | – | 25 விழுக்காடு |

கணக்குப்படி உள்ள வித்தியாசங்கள் அடுத்துவரும் ஆண்டின் முதல் தவணையுடன் சேர்த்து வழங்கப்படும்.

5.6.22. மாநில அரசு கூடுதலாக அளிக்கும் நிதிப் பகிர்வுகள்:

| | | |
|---|---|---|
| 1993–94 (கணக்குகள்) | – | ரூ 341.5 கோடி |
| 1996–97 (திருத்திய மதிப்பீடு) | – | ரூ.556.90 கோடி |
| 1997–98 (மாநில நிதிப் பரிந்துரைப்படி) | – | ரூ.1000 கோடி |
| முந்தைய ஆண்டைவிட உயர்வின் சதவீதம் | – | 80 விழுக்காடு |

1997–98 முதல் 2001 – 02 வரைக்கான இந்த நிதிப் பகிர்வின் நிலையை விளக்கும் ஒரு படிவம் இணைக்கப்படடுள்ளது.

மேற்சொன்ன அடிப்படையிலான பகிர்வுக் கோட்பாடுகளுக்குச் செயல்வடிவம் கொடுத்துவிட்டால், பராமரிப்புக்காக தனிப்பட்ட வரிகள் அடிப்படையில் வழங்கும் பகிர்வுகள் மற்றும் குறிப்பிட்ட நோக்கம் அல்லாத மானியங்கள் (Tied and Untied Grants) ஆகியவற்றின் அடிப்படையில் உதவி வழங்கும் பிரச்சினை எழாது. இருந்தாலும், இப்பரிந்துரைகள் தற்போதைய பணி அளவுகளுக்கு மட்டிலுமே தொடர்புடையவை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். வருங்காலத்தில், மேற்கொண்டு பிரித்துக் கொடுக்கப்படுகின்ற பணிகள், வழங்கப்படுகின்ற கூடுதல் அடிப்படை வசதிகள் ஆகியவற்றுக்கான நிதிப்பகிர்வு பற்றி தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். அவற்றை தற்போதைய பகிர்வு வரம்பின் கீழ் கொண்டுவரக்கூடாது. ஏனெனில், தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆண்டுவாரியான பகிர்வுகள், தற்போதுள்ள பணிகள் மட்டிலும் தொடர்பான பணவீக்கப் போக்குகளைக் கருத்தில்கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை –5.32
## உள்ளாட்சி மன்றங்களுக்கான நிதிப் பகிர்வைக் காட்டும் விவர அறிக்கை

(ரூபாய் கோடியில்)

| | சொந்த வருவாய் | உள்ளூர் ஆதார நிதித் தொகுப்பு–A | பொதுப்பங்கீட்டு தொகுப்பு–B (உள்ளாட்சி மன்றங்களுக்கு) 85%) | மாநில சேமநிதி சமன்பாட்டு நிதி மற்றும் ஊக்க நிதி தொகுப்பு – Bயில் 15 ரூபாய்) | மொத்தம் | உத்தேச மொத்தச் செலவு | நிகர நிலைமை |
|---|---|---|---|---|---|---|---|
| 1997-1998 | 518.05 | 380.00 | 527.00 | 93.00 | 1518.05 | 1472.50 | 45.55 |
| 1998-1999 | 556.19 | 410.40 | 655.68 | 115.71 | 1737.98 | 1619.74 | 118.24 |
| 1999-2000 | 655.97 | 448.23 | 805.56 | 142.34 | 2053.10 | 1781.34 | 271.76 |
| 2000-2001 | 723.87 | 478.69 | 931.17 | 164.32 | 2298.05 | 1959.92 | 338.13 |
| 2001-2002 | 800.48 | 516.99 | 1066.21 | 188.15 | 2571.77 | 2156.10 | 415.67 |